பாக்கியம இல்லாத பொல்லாத லோபி, பெரியோர்கள கூடியுள்ள சபையில் வராத கோழை. வினையின் வலிமையை விடாத - நீக்க மாட்டாத- பயனிலி - ஆகிய என்னை நீயும

மிகு பரமதான ஞான நெறிதனை விசாரமாக
மிகும உனது ரூப தானம் அருள்வாயே

எதிர் வரும் உதார சூரன் இரு பிளவதாக, வேலை
இயலொடு கடாவு-தீர குமரேசா
இனிய சொல மருத சீலர், கரு வழி வராமல் நாளும
இளமையது தானுமாக நினைவோனே

நதியுடன் அராவு பூணு பரமா குருநாதனை
நடைபெறு கரேமான மயில் வீரா

நகைமுக, விநோத ஞான குறமினுடனே குலாவு
நவமணி உலாவு மார்ப பெருமானே.

---

(410) திலங் $(5\frac{1}{2})$ 410 $\rightarrow 1\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}$

மன கபாட, பாடீர தன, தராதரா, ரூப
மதன ராச ராசிப சர.கோப

வருண பாதக ஆலோக, தருண சோபித ஆகார
மகளிரொடு சீராடி இதமாடி

மிக சிரேஷ்டமான- மேலான, ஞான மார்க்கத்தை ஆராய்ச்சி செய்ய, (மிகும்) மிக்கு விளங்கும் உன்னுடைய ரூப பரிசை-சாரூபம் என்னும் நன்கொடையை அடியேனுக்குத் தந்தருள்வாய்

எதிர்த்து வந்த மேம்பாடு உடைய சூரன் இரண்டு பிளவாகும்படி, வேலாயுதத்தை தகுதியுடன-தக்க முறையில் செலுத்தின தீரனே! குமரேசனே!

இனிய சொற்கள (மறுத) இலலை என்னாத- எபபோதும் இனிய சொல் பேசும், சுதத ஆனமாக்கள- பெரியோர்கள், மீணடும் பிறவாத படியும் எபபோதும இளமையுடன விளங்கும்படியும், நினைதது அருளபவனே!

கங்கையாறுடன பாமபை அணியும் பரமேசுரனுக்குக் குருமூர்த்தியாக விளங்கும், நடையில (கரேம்) வேகம் வாய்ந்ததான- வெகு வேக நடையை உடைய மயில் வீரனே!

எபபோதும் மலர்ந்த முகமாக இருப்பவரும் (விநோத) அழகிய அல்லது அற்புதகரமான ஞானத்தைக் கொணடவருமான வளளியுடனே கொஞசுகின்ற, நவரதனமாலை விளங்குகின்ற மார்பை உடைய பெருமாளே.

410

கபாட மனம்- கபட மனம்- கபட மனத்தையும் [அல்லது கதவு கொண்டு அடைபடடது போனற ரகசிய மனத்தையும்] பாடீர- சந்தனம அணிந்த தனங்களாகிய (தராதரம) மலையையும கொண்ட (ரூப) உருவத்தைக் கொண்டவரும, மனமத ராஜன செலுததும (ராசீப சரம) தாமரைப் பாணததின் (கோப) கோபத்துக்கு இலக்காய் இருப்பதால்

குல வேறுமையால வரும பாவம் (அலோகம்) (தம) கண்ணுக்குப புலபபடாத வரும், (தருண) இளமை அழகு வாய்ந்த (ஆகாரம) உடம்போடு கூடினவருமான மாதர்களுடன செல்வச் செருக்குடன விளையாடியும, இயமன் தினத்தும

குலைகுவேனோ; நானுது தனைகுவேனோ, வீணன
குறையனேனே நாயேனே — வினையேனே

கொடியனேனே, ஓதாத குதலையேனே, நாடாத
குருடனேனே, நீ அள்வது — ஒருநாளே.

அநக வாமன அகார முனிவர் ஆகம் மால் தேட
அரிய தாதை, தான ஏவ — மதுரேசன

அரிய சாரதா பீடம், அதனில ஏறி, ஈடேற
அகிலநாளும் ஆராயும் — இனையோனே

கனக பாவண ஆகார, பவள கோமள ஆகார,
தவள சாமள ஆகார — மயிலேறு

கடவுளே க்ருபாகார, கமல வேத - -
கருணை மேருவே தேவர — பெருமானே

கொருசிக காலம் கழிப்பவனும், கூச்சமில்லாமல் சரசஞ் செய்ப
வனும், வீண் காலம் போக்கும் முறையை உடையவனும், நாய்
அனையனும், வினைக்கு ஈடாணவனும்

பொலலாதவனும் (உன்னைப்) போற்றி ஓதாத கொசனைப் பேச்சு
உடையவனும், (உன்னை) விரும்பித் தேடாத குருடனுமான என்னை
நீ ஆண்டருளும்படியான ஒரு நாள உண்டா!

பாபமற்ற வாமன வடிவம் கொண்ட, (முனிவராகவும்) தவமுனிவரது (உடல்)
உருவத்தை எடுத்த திருமால தேட, அவருக்கு (அரியராய்) எட்டாதவராய்
நின்ற (தாதை) உன தந்தையாகிய (மதுரேசன தான் ஏவ) மதுரைச்
சொக்கநாதப் பெருமானால அளிக்கப் பட்ட

அருமை வாய்ந்த சரஸ்வதியின இருப்பிடமான சங்கப் பலகையில்
ஏறி வீற்றிருந்து, ஈடேற நாற்றிசையோரும் அறியப் புலவர்களின உரையை
ஆராய்ந்தவனே! (அல்லது) (ஈடேற) உலகத்தார் உய்ய நாற்றிசை
யில் உள்ள உயிர்கள எல்லாம் உய்ந்து புரக்கும் கிளையோனே!

பொன் போன்ற தூய (உடம்பினனே) மேனியனே! பவளம் போன்ற அழகிய
(சிவந்த) மேனியனே! தோகை உடையதும், பசுமை நிறமுடைய உடலினைக்
கொண்ட மயில மீது ஏறும

கடவுளே! கருணை உருவத்தனே! இதய கமலத்திற் பொருந்திய
ஞான சொருபனே! (வேதனம் - அறிவு, ஞானம்) கருணை மேரு மலையே!
தேவர் பெருமானே!

(411) ராமப்ரியா (3) ரு 13

மனை மக்கள் சுற்றம் எனும் மாயா
வலையைக் கடக்க அறியாதே
வினையிற் செருக்கி அடி நாயேனை
விழலுக்கு இறைத்து விடலாமோ

சுனையைக் கலக்கி விளையாடு
சொருபக் குறத்தி மணவாளா
தினை நற் சரித்ரம் உள தேவர்
சிறை வெட்டி விட்ட பெருமானே

412

(412) சங்கராபரணம் (6½) ரு (1+1½+2+2)

மாண்டார் எலும்பு அணியும். சடை
ஆண்டார் இறைஞ்ச, மொழிந்ததை.
வான், பூதலம், பவனம், கனல், புனல் ஆன
வான் பூதமும், கரணங்களும்
யான் போய் ஒடுங்க, அடங்கலும்
மாய்ந்தால விளங்கும் அது ஒன்றினை அருளாயேல்

வேண்டாமை ஒன்றை அடைந்து உளம்
மீண்டு ஆறி நின் சரணங்களில்
வீழ்ந்து அவல் கொண்டு உருக அன்பினை உடையேனை

411

மனைவி, மக்கள், சுற்றத்தார் என்கின்ற மாய
வலையை விட்டு விலக (தாண்ட) அறியாமல்
வினை வசத்தால் களித்து அகந்தை கொண்டு, அடிமை நாயேனாகிய நான்
*(விழல்: ஒன்றுக்கும் பயனாகாத ஒரு வகைப் புல்) விழலாகிய புல்லுக்கு
தண்ணீர் இறைப்பது போல வீணாகலாமோ? வீணுக்குப் (பயனின்றி)
என் ஆயுள் நாளைக் கழித்து விடல் நன்று! (நன்றன்று என்றபடி)
சுனையைக் கலக்கி விளையாடின
அழகு மிக்க குறத்தி வள்ளியின் மணவாளனே.
நாளும் நல்ல ஒழுக்கங்களை மேற்கொண்டிருந்த தேவர்களின்
சிறையை நீக்கி ஒழித்த பெருமானே

412

* இறந்து பட்ட/மாட்சிமையுடைய, திருமால் பிரமன் ஆகியோருடைய எலும்பை
அணிபவரும், சடாபாரத்தை உடைய தலைவரும் ஆகிய சிவபெருமான (இறைக்க)
வணங்கிக் கேட்க, நீ உபதேசித்த பொருளை. விண், பூமி, காற்று
தீ, நீர் ஆகிய
பெரிய ஐம்பூதங்களும், (மனம் புத்தி அகங்காரம், சித்தம் எனப்படும்)
கரணங்கள் நான்கும், 'நான்' என்னும் அகங்காரமும் நீங்கி ஒடுங்க
* இங்ஙனம் எல்லாம் இறந்து பட்டால், (அப்போது) விளங்குவதான ஒப்பற்ற
ஒரு பொருளை அருள உனக்கு இடமில்லா விட்டால் (அதற்குப் பதிலாக)
எதுவும் வேண்டாம் என்ற ஆசையற்ற மனநிலையை நான் அடைந்து உளம் எங்கும்
செல்லாது என்னுள்ளே மீண்டு (அறி) அதனை கொழுப்பு/வேகம் அடக்கி உனது
திருவடிகளில் விழுந்து ஆசையுடனே உள்ளம் உருகும்படியான அன்பு நிலையை உடைய
வனாய

வேந்தா, கடம்பு புனைந்து அருள
சேந்தா, சரண் சரண் என்பது,
வீண்போமது ஒன்று அல என்பதை — உணராதோ
ஆண்டார், தவங்கள் அளந்திட
நீண்டார், முகுந்தர், தடந்தனில,
ஆண்டு, ஆவி துஞ்சியது என்று, முதலை — வாய் உற்று

ஆங்கு ஓர் சிலம்பு புலம்பிட.
ஒன்று ஊது தூங்க சலச்சலம்
ஆம் பூ முழங்கி அடங்கும் அளவில — நேசம்

பூண்டு, ஆழி கொண்டு, வனங்களில்
மெய்ந்து, ஆள என்று, வெறும் தனி
போந்து, ஓலம் என்று உதவும் புயல் — மருகோனே.

பூம்பாளை எங்கும் மணம் கமழ்
தேம் காவில நிறைந்து ஒரு குறவர்
பூந்தோகை கொங்கை விரும்பிய — பெருமானே

(94)

வேந்தா! கடம்ப மாலை அணிந்தருளும் செம்மைப் பண்புடையவரே!
உன் திருவடியே சரணம் சரணம் என்னும் அந்த வழியாகு வீணாகப் போகும்படியான ஒரு தொண்டு அன்று- பயன் தரக்கூடிய பணியேயாம் என்பதை என் உள்ளம் உணர்ந்து பயன் பெறுதோ!

உலகெல்லாவற்றையும் ஆள்பவர், (தலங்களை) மூவுலகையும் தமது திருவடியால் அளக்க வேண்டி நீண்ட திருவுருவை எடுத்தவர், மூதியைத் தருகின்ற நாராயணர (தடம் தனில்) மடுவினிலே (ஆண்டு) அவ்விடத்திலே. உயிரே போய் விட்டது என்று, முதலை வாயில் அகப்பட்டு அங்கே ஒப்பற்ற ஒரு (சிலம்பு) மலை போன்ற கஜேந்திரனும் ஆதிகுதி அழைத்திட (ஞானது) அப் பொழுது, உனதின பரிசுத்தமான பாஞ்சசன்னியம் எனும் வலம்புரிச் சங்கம், (ஆம மூ) மூ ஆம - மலரை ஒத்த வாயினிடத்தே முழக்கம் செய்யப்பட்டு, அந்த சங்க ஓசை அடங்கும் அளவில- அடங்குவதற்குள் - அவ்வளவு விரைவில - அளவில்லாத அன்பு

பூண்டு, சக்கரத்தை ஏந்தி வந்து, அந்த மடு இருந்த வனத்தை அடைந்து (அள என்று) அந்த யானையை ஆண்டருள்வதற்காக (காப்பாற்றுவதற்காக) (வெறும் தனி போந்து) தன்னந் தனியாகவே (வேறு ஆயுதம் முதலிய இல்லாமல், லக்ஷ்மி தேவியும் கூட வராமல்) வந்து (ஒலம்) அபயம் தந்தோம என்று உதவின மேகவாணராம் திருமாலின் மருகனே!

அழகிய தென்னம் பாளை எங்கும நறுமணம் வீசுகின்ற, இனிய பூஞ்சோலையில் இருந்த ஒப்பற்ற, (குறவா பூந்தோகை) மலை வேடர்களின் அழகிய மயிலனைய வள்ளியின் கொங்கையை விரும்பின பெருமானே

413 (95)

பாகேஸ்ரீ 5½ (ம) 2+½+2

முருக மயூரச சேவக, சரவண, ஏனற் பூதரி

முகுள பயோதர கோமள முலைமீதே

முழுகிய காதற் காமுக, பதி பசு பாசத தீர்வினை

முதிய புராரிக்கு ஓதிய குருவே என்று

உருகியும், ஆடியும் பாடியும், இரு கழல நாடிச் சூடியும்,

உணர்வினொடு ஊடக் கூடியும் வழிபாடு உறாது

உலகினர் ஆசைப்பாடு அற, நிலை பெறு ஞானத்தால் இனி

உனது அடியாரைச் சேர்வதும் ஒரு நாளே

மருகனை எமை, சூழ்கொடு கருதிய மாமப பாதகன

வரவிடு மாயப பேய்முலை பருகா, மேல

வரு மதயானைக் கோடு அவை திருகி, விளாவிற காயகனி

மதுகையில் வீழச் சாடி, அ சதமா புள

பொருது, இரு கோர பாரிய மருது இடை போய், அப்போது ஒரு

சகடு உதையா, மறவோர செயது விளையாடிய

முருகனே! மயிலேறும் பராக்கிரமசாலியே! சரவண பவனே! தினை விளைந்த (பூதரி) மலைப் பெண் வள்ளியின் அரும்புறுதும், சந்தனம் அணிந்ததும (கோமள) அழகுடையதுமான கொங்கையின் மேலே

மூழ்கிய அன்பு மிகக ஆர்வலனே! (பதி) கடவுள (பசு) உயிர் (பாசம்) தளை கட்டு இவைகளின (தீர வினை) தீர்ந்த முடிவான கருததை உடபொருளே, பழைய திரிபுரம் எரித்த சிவனுககு உபதேசிதத குருவே என்று துதிதது மனம உருகியும், ஆடியும், பாடியும், இரணடு திருவடிகளை நாடியும், கூடியும ஞான உணர்ச்சியுடன் பணிந்தும், இணங்கியும் வழிபாடு செய்து

உலகினுடைய - பிரபஞ்ச ஆசைப்பாடுகள் அற்றுப் போக, நிலையான ஞானத்துடனே இனி உனனுடைய அடியாரகளுடன சேரும்படியான பாககியத்தை அடையும் ஒரு நாள் எனககுக கிடைக்குமா!

மருகன - சகோதரி தேவகியின மகன என்று கூடக் கருதாமல, சூழ்ச்சியுடன் கொல்லக கருதிய, மாமனும பாவியாம கம்சன (ஏவி) அனுப்பி வைத்த மாயததில் வலல பேய பூததியின கொங்கையை (பாலுடன், உயிரையும்) குடித்தும், மேலும்

கொலல வநத மதயானை குவலயாபீடத்தின தந்தங்களைத் திருகிப்பறிதலும், (கனமிலை) விளாமரததின காயகளும கனிகளும் (மதுகையில) தனது வன்மை யால விழுமபடிச (சாடி) தாககியும, அசதம - அந்த இறகுகளை உடைய மா-பெரிய கொக்காகிய பறவையுடன

சண்டை செயது (அதன் வாயைப் பிளந்தும் இரணடு கொடுமை வாயந்த (பாரிய) பருத்த மருத மரங்களின இடையில தவழ்ந்து சென்று (அமமரஙகளை முறிததும் அநநிகழ்சசியுடன ஒரு (சகட) வணடியை உதைததும, (மலலர்களுடன்) மற் போர செயதும இவ்வாறு திருவிளையாடலகளைச செயது

பொதுவியா சேரிகக்கே வளர் புயல் மருகா, வஜ்ராயுத
புரம் அதில் மா புததேவிர்கள் பெருமாளே.

---

414 சங்கராபரணம் தபரியா ($7\frac{1}{2}$) (—) ($1\frac{1}{2}$+2+2+2) 414

முனை அழிந்தது, மேட்டி குலைந்தது,
வயது சென்றது, வாய்ப்பல் உதிர்ந்தது,
முதுகு வெஞ் சிலை காட்டி வளைந்தது, பரணபயான
முகம் இழிந்தது, நோக்கும் இருண்டது,
இருமல் வந்தது, தூக்கம் ஒழிந்தது,
மொழி தளர்ந்தது, நாக்கு விழுந்தது, அறிவே போம

நினைவு அயர்ந்தது, நீட்டல் முடங்கலும்,
அவசமும் பல ஏக்கமும் முந்தின,
நெறி மறந்தது, மூப்பு முதிர்ந்தது பல நோயும்

நிலைவை கொண்டது, பாய்க்கிடை கண்டது
சலமலங்களின் நாற்றம் எழுந்தது
நிமிஷம் இங்கு இனி ஆச்சுது என முன்பு இனிது அருளவாயே

இனைய இந்திரன் ஏறும், அண்டர்கள்
தலமும் மங்கிட, ஓட்டி, இரும் சிறை
யிடும் இடும்புள ராக்கதர் தங்களில வெகு கோடி

இடையர்களின சேரியிலே வளர்ந்த மேக வர்ணனும் திருமாலின் மருகனே! வஜ்ராயுதம் ஏந்திய இந்திரனுடைய ஊராகிய பொன்னுலகில இருக்கும் பெருமையுடைய தேவர்கள பெருமானே.

414

துணிவு/தைரியம அழிநது போயிற்று; இருந்த ஆணவம், தான் எனும் மேன்மை தொலைந்து போயிற்று, வயது ஏறி விடடது, வாயிலிருந்த பற்கள் உதிர்ந்து போயின, முதுகு நன்றும் வளைந்த வில என்று சொல்லும்படி வளைந்து போய் விடடது, ஒளிவீசிநோ நின்ற முகம் (ஒளி மழுங்கித்) தாழ்ந்து தொங்கி விடடது; பார்வை இருள் அடைந்தது, இருமல் வந்து விடடது, தூக்கம ஒழிந்து விடடது, பேச்சு தளர்ந்து சோர்வடைந்து விடடது, நாக்கு விழுந்து விடடது (பேசுககுத தடையாம) அறிவு கெடடுப் போய்

ஞாபகம் சோர்வடைந்து மறதி வநது விடடது, கால நீடடலும், மடக்குதலும ஆய (அவசமும்) மயக்கமும், பல விதமான கவலைகளும் முற்படடன, ஒழுகக நெறியும மறந்து போய விடடது, கிழத்தன்மை (முதுமையின் கொடுமை) முறறி விடடது., பல விதமான நோய்களும் நிலையாகப் பிடித்து நினறன பாயிற படுக்கை விடாது பிடித்துக் கொணடது. முத்திரம் மலம் இவைகளின் துர்நாறறம் ஏறுந்து விடடது.

ஒரே நிமிஷம, இங்கு இனி அவ்வளவுதான (அச்சுது) உயிா பிரியும் வேளை வந்து விட்டது, என்று உலகோர் பேசும முனபாக, நான சுகம பெறும்படி (அருள்வாயே)

இநதிரம (இளைய) வருந்த, அவனது மேனமையும, தேவாகளின ஊராம் பொன்னுலகும் ஒளியிழநது மங்கும்படி, அவாகளை வெருடடி ஓடடி விடடு, அவர்களை பெரிய சிறையில அடைவித்த கொடுஞ் செயலைக கொணட அரக்கர்களின் பல கோடியா

எதிர் பொரும்படி போர்க்குள எதிர்ந்தவா
தசை சிரங்களும் நாறுறிசை சிந்திட
இடி முழங்கிய வேற்படை ஏவிய எறிவோனே
தினை வனம் கிளி காத்த சவுந்தரி
அருகு சென்று அடி போற்றி மணம் செய்து
செகம் அறிந்திட வாழ்க்கை புரிந்திடும் சீலோனே
திரிபுரம் பொடியாக்கிய சங்கரர்
குமர, கந்த, பராக்ரம, செந்தமிழ்
தெளிவு கொண்டு அடியார்க்கு விளம்பிய பெருமானே

---

5) பந்து வராளி (8) 415 (ஆதி)

மூலா நிலமதின மேலே, மனதுறு
மோக அடவி, சுடர் தனநாடி

மோன நிலை தனநாண வகையிலும்
ஏதா, நெறி முறை முதல் கூறும்
வீவா விதம், உனதாலே, கதிபெற
நேமா ரகசிய உபதேசம்

நேரே சண்டை செயயப் போரில எதிரத்தவர்களின், சதையும், (97)
கிரங்களும நாலா திசையும் சிதறிச ..., இடிபோல ஒலிதத
வேலாயுதமாகிய ஒபபற்ற ஒரு படையைச் செலுத்தினவனே!
தினைபபுனத்தில் கிளிகள் வராது காத்த அழகியாகிய வள்ளியின் சமீபத
திற் போய், அவளது திருவடியைத் துதித்து, அவளை திருமணம் செய்து,
உலகெலாம் அறிய அவருடன வாழ்க்கை புரிந்திடும் இளையோனே!
திரிபுரத்தை எரித்துப் பொடி செய்த சங்கரரின் குமரனே! கநதனே!
பராகரம மூர்த்தியே! செந்தமிழைத தெளிவுடன அடியார்க்குப்
போதித்த பெருமானே!

மனதுறு : மனததிற பொருந்தியுள்ள 415
(மோக அடவி) ஆசை என்கின்ற காடு, வேறு வழியிற செல்லாது, (மூலா
நிலம் அதின் மேலே) மூலாதார நிலைக்கு மேலே உள்ள, சுடாதனை நாடி:
ஜோதியை நாடி [மூலாதாரத்தில் உள்ள விநாயகர் முதல், மேலே சுவாதிஷ்
டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை முதலிய ஆதாரங்களில்
உளள பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுரன், சதாசிவம் ஆகிய
மூர்த்திகளின் திருககோலஙகள் பிரசனனமாகி, நல்ல சுடர் தோற்றமுற,
யோக வழியில் நாடி] (அல்லது) மூலா - மூலப் பொருளே! இப்பூமியிலே,
என் மனததில் உள்ள ஆசைஎன்கிற காடு, ஜோதிஒளியாகிய உன்னை நாடி
மௌன நிலையை, பல வகையாலும் (ஓதா) கற்று, நனனெறி முறை வழி
முதலானவற்றைக கூறுகின்ற - காட்டுகின்ற
உனது பல வகைய திருவிளையாடல்களின் உண்மை நிலையை, (உதாலே) உன்னு
டைய திருவருளாலே கண்டு, அதன பயனைக, நான நற்கதியைப பெற (நேமா)
நியமம வாயநத - ஒருங்கான ரகசிய உபதேசததின் (பலமது தருவாயே)

நீழி நீண்ட வழி காலத்தும் (எப்போதும்) தனது நிலை வாயாத-
கெடாத- மணிஒளியே சுயம் ப்ரகாச- மணிச சோதியே! நீதா-
நீதனே-நீதிமானே! பலமது பலனை- பயனை நீ தநதருள்வாயே
நானாவிதமான- பல வகையான இனபச சுவையமுதம் பருகிய உணாச்சியாலே
அழகிய மறைகளை நானகினையும், ஜெபமணி மாலை கொண்டு
நாடி ஆய்கின்ற, தவசிரேஷடர்களின, துன்பங்களை (கேடா) தொலைத்து
அழிப்பவனே! ஹரி ஹரி என ஒதப்படும் நாராயணா, இலககுமியின மருகனே!
சூலாயுதம் ஏந்தினவர், சிவஞானத்தினர், யமனை உதைத்த காலினர்- திரு
வடியினர்- தந்தருள வநத குருமூர்த்தியே
ஜோதி சொருபனே! (துடி இடை) நடனதனை- தோதீ திகு திகு
தீதீ ஜெக- என்று செய்யும் பெருமானே

416

தாககுகினற யமன தனது ஒப்பற்ற (கொடி) கூரிய வேறபடையுடன
வேகத்தில வந்து எனது உயிரைப் பாழபடுதத (உடலினின்றும்) பிரிக்க
(என் மேல) ஆசை கொண்டிருந்த பல மாதாகளின கூட்டமும் அயலார
பிறரும்,
(துக்கம்) மேனலெழுந்தவுடன், (விசை) வேகத்துடன், மேல விழுந்து
இரககத்துடனே கண்ணீர கொண்டு நிறக, கொடிய (பரபக்ஷ) மயக்
கததின காரணமாக, பலநாள முததவாகளும், இளையவாகளும
என்ன காரணம இவா இறந்ததாககு என்று சொல்லவும், சிலர், பிணதரமை
கூடி நடவுங்கள் சுடுகாட்டிற்கு என்று சொல்லவும், விரைவில ஏகுராகி
விடம வீழததுங்கள என்று(யமபுரியில்) கூறவும, புலன்களை நலல
வழியில் செலுததாத பாவியாகிய அடியேன முன

நிடூழி தன் நிலை வாடா மணி நனி,
நிதா, பலமது தருவாயே

நாவாருசி யமுதாலே திருமறை
நாவாயது செப மணிமாலை
நாடு அய, தவர் கிடர் கெடா ஹரிஹரி
நாராயணர் திரு மருகோனே
கலாதியா சிவ ஞானர் யமன் உதை
காலார் தர வரு குருநாதா
சோதி திகு திகு தீதீ செக, ஜெக
ஜோதி நடமிடு பெருமானே

416

(416) ஹமமைத்வனி (7½) (4) (1½+1½+1+1½+2)

மோது மறலி ஒரு கோடி வேற் படை
கூடி முடுகி எமது ஆவி பாழ்த்திட
மோகம் உடைய மெலு மாதா கூட்டமும் அயலாருமே
மூளும் அளவில, விசை மேல விழாய, பரி
தாபமுடனும், விழி நீர கொளாக், கொடு
மோக வினையில, நெடு நாளின முதத்வா கிளையோர்களா
ஏது கருமம் இவா சாவு எனைச், சிலர்
கூடி நடவும் இடு காடு எனக், கடிது
ஏழு நரகின் இடை வீழ்மெனப, பொறி யுறு பாவி

ஏழு புவன மிகு வான நாட்டவர

சூழு முனிவர் கிளை தாமும. ஏத்திட -

ஈசன அருள் குமர,வேதம் ஆராத்து எழ வருவாயே

சூது பொரு தருமன, நாடு தோற்று,இரு

ஆறு வருஷம வனவாசம உற .,இயல்

தோகையுடனுமெ விராட ராச்சியம உறைநாளில்

சூறை,நிரை,கொடு அவர் ஏக,மீட்டு எதிர,

ஆரும் உரிமை தருமாறு கேட்டு,தூ

தாது செல,அடுவல ஆண்மை தாக்குவன் என,மீள

வாது சமா திருதரான ராட்டிர

ராஜ குமரர் துரியோதனை பிரா

மாண,நிருப ரோடு சேனை தாட்பட வரிசாப

வாகை விஜயன,அடல வாசி பூட்டிய

தேரை முடுகு நெடு மால,பராக்ரம

மாயன,மருக,அமர நாடா பாரதிப பெருமானே.

---

(417) பெஹாக (8) 417 (-) ஆதி

வாதம,தலைவலி,சூலம,பெருவயிறு

ஆகும பிணி இவை அணுகாதே

ஏழு உலகத்தினரும், சிறந்த தேவ லோகத்தினரும், சூழ்ந்துள்ள முனிவர் கூட்டங்களும் போற்றி நிற்க, ஈசன் அருளிய குமாரமூர்த்தியே! வேதம் ஒலித்து நிறைந்து எழ, வந்தருள்வாயே

* சூதாட்டம் ஆடின தரும ராஜா, நாட்டை இழந்து, (பனி) பன்னிரண்டு வருஷம் வன வாசம் ஏற்றுக் கொண்டு, கற்பியல் உடைய மயிலனைய துரோபதை யுடன், விராட ராஜ்ஜியத்தில் வாழ்கின்ற போது

(நிரை) பசுக்களை (கூறை கொடு) கொள்ளை அடித்துக் கொண்டு துரியோதனர் செல்ல, (எதிர் மீட்டு) எதிர் சென்று அப்பசுக்களை மீட்டு, தமக்குரிய அரசாட்சி உரிமையைத் தருமாறு கேட்டு ஒப்பற்ற தூதை அனுப்ப போருக்கு உரிய வலிய ஆண்மையோடு தாக்குதல் ஒழிய, அரசுரிமை தரேன் என்று துரியோதனன் கூறத் - தூதினின்றும் மீளவும்,

* தாக்கித்துப் போருக்கு வந்த திருதராஷ்டிர ராஜனுடைய குமாரர்களான துரியோதனும் பிறரும (அவன் தம்பியர் முதலானோரும்) மாள - இறந்து பட - பிற அரசர்களுடன் சேனைகள் எல்லாம் தூளாக - (பரிசாய) கட்டப்பட்ட வில் வினை வரும்

வெற்றியைக் கொண்ட அருச்சுனனுடைய வலிய குதிரைகள் பூட்டிய தேரை செலுத்திய பெரிய திருமால், பராக்ரமம் பொருந்திய மாயவன் ஆகிய பெருமானுடைய மருகனே! வானவருக்கு அரசாம் பெருமானே!

417

வாதம் தலைவலி சூலை நோய், மகோதரம் ஆகிய நோய்களான இவை ஒன்றும் என்னை அணுகாமலும்

மாயம் பொதிதரு காயம் தனின் மிசை
வாகும் கருவழி — மருவாதே
ஓதம பெரு கடல மோதும் திரையது
போலும் பிறவியில் — உழலாதே
ஓதும பல அடியாரும் கதிபெற
நான் உன் கழலிணை — பெறுவேனே
கீதம புகழ் இசை நாதம் கனியொடு
வேதம் கிளர்தர — மொழிவார் தம்
கேடின் பெருவலி மாளுமபடி. அவ
ரோடுங கெழுமுதல — உடையோனே
வேதம் தொழு திருமாலும் பிரமனும்
மேவும் பதம் உடை — விறல் வீரா
மேல் வந்து எதிர் பொரு சூரன் பொடிபட
வேல் கொண்டு அமா செயத — பெருமானே

---

(418) குறிஞ்சி (8½) 418 (ஃ) (1+½+1+½+1½+2)

வாரி மீதே எழு — திங்களாலே
மாரவேள் ஏவிய — அம்பினாலே
பாரெலாம் ஏசிய — பண்பினாலே
பரவியேன அவி — மயங்கலாமோ
சூரன் நீள் மாா்பு — தொளைத்த வேலா

அருகுணம் நிரம்பிய உடல கொண்டு வாழும்படி விடும்,
கருவின வழியொனறும் (என்னைச் சேராமலும)
வெள்ளமாய நிறைநது நிறகும் கடலில் மேலும் மேலும் வீசுகின்ற திரைகள
போனற பிறப்புகளில (நான்) அலைசசல் உருமலும
(உனது) திருப்புகழை ஓதகினற பல அடியார்களும் நற்கதி பெறவும்
நான உனது திருவடியிணைகளைப் பெறுவேனே-
இசையினபமும். உன புகழைச சொல்லுகின்ற ஓசையின்பமும (கலகது)
உளளக கனிவொடு-பகதியோடு- வேத வாககியங்களை நன்கு விளஙு
கும்படி ஓதுகினறவர்களுடைய
கேடடினை விளைவிக்கும் ஊழ வினையின பெருவலி (மாறும்படி) அவா
களைப பீடிக்காது ஒழியும்படி. அவர்களோடு (எப்போதும) கெழு
முதல்- பொருந்துதல-உடனிருந்து காககும் திருவருள உடையவனே!
தேவதஙகள் தொழுகினற திருமாலும். பிரமனும விரும்புகினற
திருவடிகளையுடைய வெற்றி வீரனே!
மேலெழுந்து எதிர்த்துப் போர் செய்த சூரன் பொடிபடடழியும்படி
வேலாயுதம் கொண்டு போர் செயத பெருமானே

418

கடல் மீது எழுகினற நிலவாலும்
மனமதன செலுத்தின அம்பினாலும
உலகிலுளளோரா யாவரும் இகழ்நது பேசும் செய்கையாலும்
பாவியாகிய எனது உயிர நிலையழியலாமா.
சூரனுடைய பெரிய மார்பைத தொளை செய்த வேலனே.

சோதியே தோகை — அமர்ந்த கோவே

மூரிமால யானை — மணந்த மாயா

மூவர் தேவாதிகள் — தம்பிரானே

419

(19) பூர்விகல்யாணி (2) (ம) 014 உகனி

வான் அப்பு கு மறுரு மருத்துக — கலைமேவு

மாயத் தெற்றி பொய்க்குடில் மூக்கப — பிறவாதே

ஞான சித்திச் சித்திர நித்தத் — தமிழால், உன

நாமத்தைக் கூறும் புகழ்க்குப — புரிவாயே

கானக் கொச்சைச் சொற் குறவிக்குக் — கடவோனே

காதிக், கொற்றப் பொற்குல வெற்பைய — பொரும் வேலா

தேனைத் தத்தச் சுற்றிய செச்சைத — தொடையோனே

தேவச் சொர்க்கச் சக்கிர வாத்திய — பெருமானே

420

(420) ஹிமமேந்திர மத்யமம (22) (ம) 3/3/30 · உகனி

வேடா செழும திணை காத்து கிதண மீதில கிருந்த பிராட்டி.

விலோசன அம்புகளால செயல் — தடுமாறி

ஜோதியே! மயில் மீது வீற்றிருக்கும் அரசே!
பெருமையும், உன் மீது ஆசையும் கொண்ட தேவசேனையை மணந்த திருமார்பா
திரிமூர்த்திகளுக்கும் தேவாதிகளுக்கும் தம்பிரானே!

419

ஆகாயம், நீர் (கு) மண் (புறறு) இவையுடன் கூடின (மருத்து) காற்று
நெருப்பு ஆகிய பஞ்ச பூதங்கள் சேர்ந்துள்ள.
மாயம்-நிலையிலாத, தெறறி- உரு கட்டடமாம், பொய்த் தோற்றமான
இந்தக் குடிசை வீடாகிய உடலினுடனே பிறவாமல்
ஞானம் சித்திக்க (கை கூட) வைப்பதும், (சித்திர) அழகுள்ளதும், (நித்தம்)
அழியாததுமான தமிழ் கொண்டு, உனது
(முருகன், குமரன், குகன்) ஆதிய நாமங்களைக் கூறிப் புகழ்வதற்கு அருள்புரிவாய்
கூடமல வசித்த, கொச்சைச் சொற்களை (பேச்சை) உடைய குறத்தி
வள்ளிக்குக் கடமைப் பட்டவனே
(கொற்றப-) வெற்றி பெற்றிருந்ததும், பொன்மயமாயிருந்ததுமான
கிரவுஞ்ச மலையைக் (காதி) கூறு செய்து அதனுடன் சண்டைசெய்த (மது
தேனை) வண்டுகளைத் (ததத் சுற்றிய) தாவிக் குதிக்கும்படி வைத்துச்
சுற்றிய- சுற்றி அணியப்பட்ட வெட்சி மாலையனே!
தேவர்கள் வாழும் சொர்க்கத்தில் விளங்கும் சக்ரவர்த்திப் பெருமாளே.

420

வேடர்களுடைய செழுமை வாய்ந்த தினைப்புனத்தைக் காத்து அங்கு பரண்
மீதிலிருந்த, வள்ளி பிராட்டியினுடைய தனங்கள் எனும் அம்புகளால்
செயல் தடுமாறியது போல நடித்து

[illegible]

வேளை புகுந்த பராக்ரமம் அது பாடி

நாடு அறியும் படி கூப்பிடு நாவலர் தங்களை ஆர்,

பதினெண்யுகங்களும் ஏத்திய திருதாளில்

நாறு கடம்பு அணியாய் பரிவோடு புரந்த பராக்ரம

நாட அருந்தவம் வாய்ப்பதும் ஒருநாளே

ஆடக மந்தர தீர்க்கு அசையாமல உரம் பெற நாட்டி

ஓராயிரம் வெம் பகு வாய்ப் பணி கயிறுக

ஆழி கடைந்து அமுது ஆக்கி அநேகர் பெரும் பசி தீர்த்து அருள்

ஆயனும், அன்று எயில் தீப்பட அதி பார

வாடை நெடுங்கிரி கோட்டிய வீரனும், எம் பரம் மாறிய

வாழ்வு என, வஞ்சக ராக்ஷதர் குலம் மாள

வாசவன் சிறை மீட்டு, அவன ஊரும் அடங்கலும் மீட்டு,

அவன வான் உலகும குடியேற்றிய பெருமானே

மேனி சோர்வடைந்து, மனம் உருகி, பரிதவிக்கத் தக்க நிலையில்,
அவளிருந்த திணைப்புனத்திற்கு, தக்க சமயம் பார்த்துச் சென்ற
பராக்ரமத்தை வலபத்தைப் புகழ்ந்து பாடி

உலகம் அறிய அழைக்கின்ற புலவர்களை (ஆர்) ஆர்த்தும் கட்டி வசீகரித்தும், பதினாலு உலகங்களும் போற்றும் உனது திருதாளில், நறுமணம் வீசும் கடப்ப மாலையை அணிந்து பரிவுடனே/அவர்களை காக்கின்ற உனது பராக்ரமத்தை (நாடு) நாடிநிற்க/ஆய்ந்தறிய வேண்டிய அருமைத் தவச் செயல அடியேனுக்குக் கூடும்படியான ஒரு நாள கிட்டுமா (கிடைக்க வேண்டும் என்றபடி)

பொன் மயமான மந்தர மலையை திருப்பாற்கடலில் அசையாதபடி பலமாக மத்தாக நிறுவி, ஒப்பற்ற ஆயிரக்கணக்கான கொடிய விஷப்புள்ள நாக்குகளை உடைய பாம்பாகிய ஆதிசேஷனை/வாசுகியை கயிறாகச் சுற்றி கடலைக் கடைந்து, அமுதத்தை வரவழைத்து அனைத்து தேவர்களுடைய பெரிய பசியை நீக்கி அருளின திருமாலும், அன்று முப்புராதிகளின் மும்மதில்களும் தீயில் அழிய, அதிக பாரமானதும் வடக்கேயுள்ளதுமான மேருமலையை (கோட்டிய) (வில்லாத) வளைத்த வீரராகிய சிவபிரானும், எங்கள் பரம-பாரத்தை (மாற்றிய) நீக்கிய வாழ்வே என்று துதிக்கவும், வஞ்சக அரக்கர்களுடைய கூட்டம் அழியவும் இந்திரனை வலிய சிறையினின்றும் மீட்டும், அவன் ஊராகிய பொன்னுலகும் மற்றும் அவனுக்கிருந்த செல்வங்கள் யாவற்றையும் மீட்டுத் தந்தும், அவனுடைய விண்ணுலகத்தில் தேவர்களைக் குடியேற்றின பெருமானே.

421 (8½) (~) (½+1½+1+ 1½ +2)

(421) ஸாமா

வேத விதகா ஸாமி நமோ நம
வேல் மிகுந்த மா தூரா நமோநம
விமசக்ர யூகாளா நமோ நம் — விநது நாத

வீர. பத்ம சீர் பாதா நமோநம
நீல மிக்க கூதாளா நமோநம
மேகம் உத்த மாயூரா நமோ நம — விணடிடாத

போதம் உத்த போ போதா நமோநம.
பூதம் மறுமே ஆறய நமோநம,
பூரணதநுளே வாழ்வாய் நமோ நம — துங்க மேவும்

பூதரத்தெலாம் வாழ்வாய் நமோ நம
ஆறிரடடி நீள தோளா நமோநம
பூஷணைத்து மா மார்பா நமோ நம — புணடரீக

மீதிருக்கும் நர மாதோடு, சேயி தழ்
மீது இருக்கும் ஏர் ஆர் மா, புலோமஜை
வீரம் மிகக ஏற் போர் மாதர், நீடினம் — நிறைநாளும்

வேத விததகி, வீமா, விராகிணி,
வீறு மிகக மா வீண கரே, மக
மேரு வுற்ற சீரே. சிவாதரே — அங்கராகீ

வேதம் வல்ல பேரறிவாளனே நமோ நம! வேலாயுதத்தைச் சிறப்புற ஏந்தும் மகா சூரனே நமோ நம; (வீமம) அச்சம் தரக் கூடிய சகர வியூகத்தை (போர்க்களத்தில்) ஆண்டவனே நமோ நம சிவனது நவபேத மூர்த்தங்களுள் அருவத திருமேனியாம் - நாத விந்துவாய் வீரனே, தாமரையன்ன அழகிய திருவடிகளை உடையவனே நமோ நம நீல நிறத்துக் கூதளப்பூ மாலையனே நமோ நம, மேக நிறம் கொண்டுள்ள மயில் வாகனனே நமோ நம, வெளியே சொல்லுதற்கில்லாத ஞான நிலையைக் கூடினவர்களின் ஞானப் பொருளே நமோ நம; பஞ்ச பூதங்களாய, பிறவாய் விளங்குபவனே நமோ நம, பூரணப் பொருளாம் - எல்லாமாய 'வாழ்பவனே நமோ நம; உயர்ச்சியும், பரிசுத்தமும் உள்ள மலைகளில் எல்லாம் வாழ்பவனே நமோ நம பன்னிரண்டு பெரிய தோளனே நமோ நம, ஆபரணங்கள் அணிந்த அழகிய மார்பனே நமோ நம, (வெள்ளை) தாமரையின்

மேலே வீற்றிருக்கும் சரஸ்வதியுடனே, விரிந்த இதழ்களை உடைய செந்தாமரை மீது வீற்றிருக்கும் (ஏர் ஆர்) அழகு நிறைந்த (மா) இலக்குமியும், (புலோமசை) இந்திராணியும், வீரம் மிகுந்துள்ள சப்த மாதர்களும், அவர்களுடன் (நீடினம்) கூடி நிற்கும் எல்லாத் தெய்வ மகளிரும், நின்று நாள் தோறும்

வேத ஞானியே! பயங்கரியே! (விராகிணி) பற்றற்றவளே! ([illegible]) சிறப்பு நிரம்பி உள்ள அழகிய வீணையைக் கையில் ஏந்தியவளே! மகா மேரு போல விளங்கி வாழும் சிறப்பை உடையவளே! சிவனுடைய தேகத்திற் பங்கு கொண்டவளே! (அங்கராகி) பரிமள திரவியங்களைப் பூசியுள்ளவளே!

ஆதி சத்தி, சாமா தேவி, பாராவதி,
நீலி, துத்தியார் நீள் நாக பூஷணி
ஆயி, நித்தியே, கௌமர மாதவி — என்று தாழும்

ஆர்மைய பெற்ற சீராளா நமோ நம
சூரை யடு நீள் பேரா நமோ நம
ஆரணத்தினர் வாழ்வே நமோ நம — தம்பிரானே

ஆதி சக்தியே! சாம வேதம் போற்றும் தேவியே! (அல்லது) சாம
நிறம் கொண்ட தேவியே! பார்வதி! தேவியே! (நீல நிறத்தவளே!
புள்ளிகள் நிறைந்த பெரிய பாம்புகளை அலங்காரமாக அணிந்தவளே!
தாயே! (நித்தியே) என்றும் இருப்பவளே/அழிவில்லாதவளே!
(கோமரம்) சடையுள்ள துர்க்கா தேவி என்று தோத்திரம் செய்து
வணங்குகின்ற

ஆர்யை பெற்ற சீராளனே நமோ நம! சூரனை வதைத்துப் பெரும்
புகழ் பெற்றவனே நமோ நம! வேதம் கற்றவர்களின்
செல்வமே நமோ நம! தம்பிரானே

துரிய முடிவை (323) அகர முதலின :

துரிய முடிவு - துரியாதீதம்.

அவஸ்தைகள் ஐந்து வகைப்படும் :- சாக்கிரம், சொப்பனம் சுழுத்தி, துரியம், துரியாதீதம் இந்த ஐந்திலும் ஆன்மா முறையே புருவநடு, கண்டம், இதயம், நாபி, மூலாதாரம் என்ற ஐந்து இடங்களைப் பற்றி நிற்கும்.

சாக்கிரம் ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5; கரணம் 4 புருடன் 1; தன்மாத்திரை 5, வசனாதி 5; வாயு 10 ஆக 35 தத்துவங்களுடன் கூடி ஆன்மா தொழிற்படும்

சொப்பனம் தன்மாத்திரை 5, வசனாதி 5, வாயு 10, கரணம் 4. புருடன்-1 ஆக 22 தத்துவங்களுடன் கூடி ஆன்மா நிற்கும்

சுழுத்தி : சித்தம்-1, பிராணன் 1, புருடன்-1 ஆக இந்த மூன்றுடன் கூடி ஆன்மா அடங்கும்

துரியம் பிராணன புருடன் என்ற இரண்டு மட்டுமேயாகியிருக்கும்

துரியாதீதம் - புருடன் மட்டுமே தனித்து நிற்கும்.

(வா)

---

(2) மாசான நாலெண் வகைதனை 328 அசார நினை

குற்றங்களுடன் கலந்த 32 குணங்களை (குணப்பண்பு 27, தொழிற் 5

குணப்பண்பு 27 அறிவு அருள். ஆசை அச்சம். மானம், நிறை. பொறை உவப்பு. இரக்கம். நாண, வெகுளி துணிவு. அழுக்காறு. அன்பு எளிமை எய்த்தல். துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல வெற்றி. பொச்சாப்பு உவகைம் மறம். மதம் (மறலி)

தொழிற்பண்பு 5 துயத்தல துஞ்சல் தொழுதல. அணிதல, உயத்தல்

நாலெண் வகை (4+8) 12 என்று கொண்டால்

உயிர் வேதனை 12 — அனல. சீதம் அசனி, புனல். வாதம் ஆயுதம் விடம் மருந்து, பசி தாகம், பிணி முனிவருமை

நாலும் எட்டும் என்று கொண்டால

உயிர்த்தோற்றம் 4 — கருப்பை முட்டை நிலம் வியர்வை

ஆணவ மல காரியம் 8 — விகற்பம், கறபம குரோதம், மோகம், நகை கொல் அருர், மதம்

[செ]

---

(3) யமனை மோதி — 327 — அமல வாயு

எமனைத் தாக்கி வெற்றி பெறுவது என்பதன் கருத்து முடிவைச் செய்கின்ற காலத்தை வென்று நித்தியராக சிவயோகிகள் தமது விருப்பப்படியிருக்க வல்லார் என்பதாகும் [வா]

---

(4) வாராகி- சபதமாதாகளில் 3ருவர் — 331 — ஆராத காதலாகி

சபத மாதாகள் — அபிராமி, மகேசுவரி கௌமாரி நாராயணி வாராகி இந்திராணி காளி

வாகனம — அன்னம் இடபம மயில கருடன சிங்கம யானை, பேய்

ஆயுதம — மறை, பிநாகம் வேல ஆழி கலப்பை வச்சிரம சூலம [வா]

---

(5) ஆவாகன மாமந்திரத்து பூஜை — 332 — ஆராதனரா

கிரியா பூஜை: குண்ட மண்டலமிட்டு 3ரு பொருளிய பரம்பொருளை ஆவாகனஞ் செய்து மந்திரங்களைக் கூறி அதற்குரிய அங்கங்களுடன் செய்வது

ஞான பூஜை. உள்ளக் கோயிலில் எங்கும நிறைந்த பரம்பொருளையுன் கருவிகரணங்களின்றி நிர்விகல்ப மாகச் செய்வது. [வா]

(6) அநத நாளில - நான்கு நிகழ்ச்சிகள் 342 உறவின் முறை

1) உறவின முறை கதறியழ உறவினர் அழுவார்கள்
2) ஊராரும் ஆசையற : ஊரவர் வந்து ஆசையை விடுவார்கள்
3) பறை திமிலை முழவின் இசை பறையறைவார்கள்
4) அரிசி வாய் மீதிலே சொறியும் வாககரிசியிடுவார்கள்

இதற்குப் பதிலாக வேறு நான்கு நிகழ்ச்சிகள் நிகழ வேண்டும்

1) உனது முக கருணை மலர். • உறவினரின அழுமுகங்களுககும் பதிலாக முருகனின முகமலர் ஆறும் • தோன்றவேண்டும்
2) முன் ஆர் அடியார் வந்து கூட ஊரார்களுககுப் பதிலாக உனது அடியார் கூட்டம் வர வேண்டும
3) மறை அறைய பறைக்குப் பதிலாக வேதங்கள் முழஙக வேண்டும்
4) அமரர் தரு பூமாரியே சொரிய வாய மீது அரிசி சொரிவதற்குப் பதிலாக அமரர் தரு பூமாரி சொரிதல் வேண்டும்

[வா]

(7) திசையில் நின்ற நாகம் 342 உறவின் முறை

அஷ்ட நாகங்கள் வாசுகி, அனந்தன், தககன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன

[செ]

(8) குறமறவா கொடி அடிகள் வருட 342 உறவின் முறை

தீவிரகரமான ஆன்மாக்களை இறைவன எளிதாகத தானே சென்று வேண்டி ஆட்கொள்வான் என்ற குறிப்பினை யுணர்த்துகின்றது வள்ளிபிராட்டியை முருகவேள அடிகள வருடியருளியது

[வா]

(9) முயலகனின மிதாடுவார்   342 உறவின் முறை

முயலகன என்பது ஆணவ மலம் ஆணவ மலம் 3ரு போதும்
அழியாது- அதன் வலி தேய்ந்து அடங்கி நிற்கும் - அதனை
இறைவன் முயலகனைக் கொல்லாது அதன வலிமையை
அடக்கியருளினார   (வா)

---

(10) தெகூண செவிதனில   345 வடுடன்

உபதேசம் பெறுபவர் கிழக்கு நோக்கி இருக்க உபதேசிப்பவர்
வடக்கு நோக்குவா அப்போது உபதேசம் பெறுபவருடைய
வலது காதில் உபதேசம் செய்யப்படும் அந்த வலது காது
தெற்குப் பக்கம் இருக்கும் அதலின தெகூண செவிதனில்
போதனை என்றார்.   [செ]

---

(11) தவம், மாதவங்கள பயில்   366 திவதான

தவம் பொது சிறப்பு என இருவகைப்படும்.
தனது ஆன்மா உய்ய வேண்டும் என்று செய்வது பொதுத் தவம்
காமிய பயன் கருதிச் செய்வது பொதுத் தவம்
உலகம் உய்ய வேண்டும் என்று செய்வது சிறப்புத் தவம்
பயன் குறியாது செயவது சிறப்புத் தவம்.   [வா]

(12) அகில வாதிகளும் 397 புகரில சேவல

தேகாத்மவாதி .. தேகமே ஆன்மா என்பவன

கரணாத்மவாதி .. கரணமே ஆன்மா என்பவன

இந்திரியாத்மவாதி .. இந்திரியங்களே ஆன்மா என்பவன

ஏகான்மவாதி .. ஆத்மாவைத் தவிர வேறுஇல்லை என்பவன்

பிரதிபிம்பவாதி .. பிரமத்தின் நிழலே உலகம் என்பவன்

பரிணாமவாதி .. பால் தயிராகியது போல் பிரமமே உலகமாகியது என்பவன்

விவர்த்தனவாதி . பிரம்மத்தினின்றும் உலகம் வந்தது என்பவன்

க்ஷணபங்கவாதி . கணந்தோறும் வேறு வேறு ஆன்மா உடம்பில் வருகின்றது என்பவன்

[வா]

(13) அறுசமய சாத்திரப். 398 பிறவியலே

சைவம், வைணவம், காணபத்யம், கௌமாரம், சாக்தம், சௌரம் ஆறுசமயங்களும் ஒரே குறிக்கோளைக் கொண்டவைகளாகும்.

ஒரு கடவுளுக்கு ஆறு தன்மைகள்

சிவம் - மங்கலம்; விஷ்ணு வியாபகம், காணபத்யம்: கீடின்மை

கௌமாரம்: இளமை; சாக்தம் - வலிமை; சௌரம் ஒளி

[வா]

(14) கற்பகத்தோப்பு 400' புத்தகத்து -

கற்பகம் வேண்டிய பொருளை கொடுக்கும். அவை 10 வகையன

1) மத்தியாங்கம் திவ்ய ஸாரமாதிய நானாவித பானங்களைத் தரும்

2) தூரியாங்கம் . நானாவித வாத்தியங்களைத் தரும்

3) பூஷணாங்கம் அனேகவித ஆபரணங்களைத் தரும்

4) மாலியாங்கம் அநேக வித மாலைகளைத் தரும்
5) தீபாங்கம் அநேக வித ரத்ன தீபங்களைத் தரும்
6) கிருகாங்கம் விரைவாக மண்டபாதிகளைத் தரும்
7) சோதிராங்கம் சந்திராதித்தர் ஒளியினை அடக்கும் ஒளியைத் தரும்
8) போசனாங்கம் நானவித ரசைத்தனவாகிய நான்கு வகை உணவினை
9) பாசனாங்கம் - வேண்டிய கலன்களைத் தரும்
10) வஸ்திராங்கம் விசித்திர வஸ்திரங்களைத் தரும்

[ஜீ]

(15) மால கொண்ட பேதை 391 நிலங்கொள்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள
மூர்த்தி அவனிருக்கும வண்ணங் கேட்டாள
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே [அப்பர்]

மயங்குகின்றாள், தியங்குகின்றாள், உள்ளம் கசிந்து கண்ணீர் பெருகினறது அபபதியையே நினைந்து பிச்சியாகின்றாள். தன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும அன்றே நீததாள் தன்னையே மறந்து விடுகின்றாள். அங்கே அவள பேரும் கெட்டு விட்டது இது அருட காதல. இதன பெருமை அளவிடற்கரியது. [வா]

(16) புரிபிழை பொறுக்கும் சாமி   401 புலிக்குண்   (108)

வாக்கினால் வரும் பிழைகள் : பயனில்லாத சொற்களைக் கூறுதல், பொய் புகலுதல், புறங்கூறல், கடுஞ்சொற்களைக் கூறல்

மனத்தினால் பொறாமை, காமம், கோபம், பகை

காயத்தினால் களவு, கொலை, புலை, சூது

கண்களினால் பிறர் மனைவியரை விரும்பிப் பார்த்தல், பெரியோர்களை அவமதித்துக் காணல், கடவுளர் திருவுருவங்களை அலட்சியமாகப் பார்த்தல்

செவியினால் தெய்வ நிந்தனை, வேத நிந்தனை, அடியார் நிந்தனை முதலியவைகளைக் கேட்டல் [வா]

(17) மாயை   408 மதனேவிய

மா. தோற்றம் யா ஒடுக்கம்

தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் எது காரணமோ அது மாயை.

உலகிற்கு முதற் காரணம் மாயை அது நித்தமாய், சடமாய், முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய், முதல்வனின் வியாபியமாய், மெய்ப்பொருளாய், அருவமாய் நிற்பது.

மாயை இருவகைப் படும்

சுத்த மாயை சுத்தப் பிரபஞ்சத்திற்கு (சிவ தத்துவம் முதலியன) முதற் காரணம்

அசுத்த மாயை அசுத்தப் பிரபஞ்சத்திற்கு (கலா தத்துவம் முதலான) முதற் காரணம்